# தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு.

மலர் 2 | மார்ச் 1942 | இதழ் 3

## விண்ணப்பம்

அன்புடையீர்!

எங்கும் போர் நடந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் மேல் நாட்டு மருந்துகள் கிடைப்பது அரிது. அன்றியும், இலிங்கம், கந்தகம் மனேசிலை போன்ற பாடாணங்கள், கர்ப்பூரம், பவழம், கொடிப்பவழம், வெள்வங்கம், கருவங்கம், குங்குமப்பூ முதலியவைகளும் கிடைப்பது கடினமாக இருக்கிறது. ஆயினும், தமிழ் வைத்தியங் கற்றவர்களுக்கு மருந்துகளுக்குக் குறைவில்லை. தாதுப்பொருள்களும் சில தாவரப்பொருள்களும் கிடைக்காவிடினும் பல சிறந்த மூலிகைகள் தமிழ் நாட்டில் பெரும்பாலும் எங்கும் கிடைக்கின்றன. அவைகளைச் சேகரித்து சாறு, சுரசம், கற்கம், குடிநீர், சூரணம், இலேகியம் முதலியவைகளாகச் செய்து உபயோகிக்கலாம். தேரன் இயற்றிய 'குடிநீர் நூறு' என்னும் நூலை இச்சமயத்தில் வெளியிடுவது யாவருக்கும் உபயோகப்படும் எனக் கருதி அதைச் சிறு பகுதிகளாக இப்பொழிலில் அடுத்த இதழ் தொடங்கி அச்சிடுகிறோம். அதை யாவரும் பயன் படுத்திக் கொள்வீர்களாக.

காகித விலையும் ஏறிவிட்டது. சந்தாதாரர்களும் சந்தாவை முன்னதாக அனுப்புவதில்லை. இதனால் கஷ்டம் பதின்மடங்கு அதிகமாகிறது. பொழிலும் குறித்த தேதியில் வெளிவருவது தடைப்படுகிறது. ஆகையால் அன்பர்களே! உங்கள் சந்தா ரூ. 2 ஐ உடனே அனுப்புமாறு வேண்டுகிறோம். சித்த வைத்தியம் ஓங்க இத்தமிழ் மருத்துவப் பொழிலை ஆதரிப்பீர்களாக.

சிலரே இப்பொழிலுக்குக் கட்டுரைகள் எழுதுகின்றனர். அவர்களும் முறைப்படி எழுதுவதில்லை. ஆகையால், எங்ஙனம் எழுதுவது? யாருக்கு அனுப்புவது? என்னும் விபரங்களை இதழின் வெளிப்புறத்தில் அச்சிட்டுள்ளோம். யாவரும் அதைப் படித்துக் கட்டுரைகளை எழுதி எமக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்:

கோ. துரைராஜன்.

# சித்த வைத்தியத்தின் வலிமை

Dr. N. சுப்பிரமணியம், L. I. M.
(Member, Central Board of Indian Medicine.)

(48 ம் பக்கத் தொடர்ச்சி)

## சித்தர் வலிமை.

சித்தர் வலிமையை அவர்கள் இயற்றியுள்ள ஆயுர்வேதம், நாடி, காயகற்பம், இரசவாதம், மணிமந்திரமருந்து, யோகம், ஞானம் முதலிய பல விளக்கங்களிலிருந்து அறியலாம். சித்தர்களது ஆயுர்வேதம் நம்நாட்டுப் பழக்கவழக்கங்கள், கால வேறுபாடுகள், இயற்கை வளப்பங்கள் இவற்றிற்குத் தக்கபடி விளக்கப்பட்டிருக்கின்றன.

உடலின் உயிர்த்துடிப்பை உணர்ந்து, நோய்ப்படுதலைக் கணித்து அறிவதற்கு ஏற்ற நூல் நாடி நூலாம். இது சித்தர்களுக்கே சிறப்பானது. நாடி ஒன்றைக்கொண்டே நோயை நிதானிக்கக் கூடுமென்பதை நாடி நூல்களை முறையே அறிந்து கொள்பவர்களுக்குத்தான் தெரியும்.

காயகற்பம் என்பது உடல் வெகுநாள் நீடித்து நிலைத்திருப்பதற்கு ஏற்ற சாதனம். இரசவாதம், மணி மந்திர மருந்து, யோகம் இவைகள் சித்தர்களின் சாதனங்கள்.

உடலிலுள்ள கெடுதல்களை நீக்கி மனதைப் பொன்னாக்குவது இரசவாதம். மனம் செம்பிற்கும், ரசம் விந்திற்கும் உவமை கூறப்படுகிறது. விந்தடக்கம் செய்து அதாவது இரசத்தைக் கட்டுவதனால் உடல் மணிபோல் ஒளிவிடுகிறது. செம்பிற் களிம்பு நீங்குவது போல மனதில் மலம் நீங்கி, அம்மனம் ஒளிவிடும். உடலிற் றங்கியிருப்பதையே பொன் செய்வது என்றும், இரசவாதம் என்றும் சித்தர்கள் கூறினார்கள்.

> "எளிய வாது செய்வா ரெங்களீசனை
> யொளியை எண்ணி யுருகு மனத்தாய்
> தெளிய வோதிச் சிவாயநம வெனும்
> குளிகையிட்டுப்பொன் னாக்குவன் கூட்டையே" திருமூலர்,

எப்பொருளை அறிவதற்கும் எச்செயலைச் செய்வதற்கும் நமது மனம், மொழி, மெய் மூன்றும் ஒன்றுபட்டாலன்றி வெற்றியடைய முடியாது. இம்மூன்றும் ஒன்றுவதற்கான சாதனங்களே மணி, மந்திர மருந்தாகும்.

மணி :— மனம், மொழி, மெய்களுள் மனதைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினம். மொழியையும் மெய்யையும் ஒன்றுபடுத்துவது எளிது என்றே சொல்லலாம். ஒரு கால வரையரைக்குட்பட்டு ஓரிடத்திலிருந்து ஓரளவு எண்ணிக்கையுள்ள மந்திரத்தை அவசியம் உருச்செய்வதால் மொழியும் மெய்யும் ஒரு நிலைப்படுகின்றன. அதற்குச் சாதனம் மணி. அது எண்ணுவதற்கு உதவும்.

இவ்விதம் இரண்டும் ஒன்றுபட பல நாள் பழகி வருவதால், அடங்காது இஷ்டம்போல் சுற்றித்திரியும் மனதிற்கு வேறு பற்றுக்கோடு ஒன்றுமின்றி ஒன்றுசேர்ந்த மொழி மெய்யிடத்தே அடைக்கலம் புகுவதாகிறது.

மந்திரம் :— மூன்றும் ஒன்றுபடப் பழகியபின் மந்திரத்தாலான பலன் கிடைக்கிறது. சிவாயநம என்பது மந்திரம். இது சித்தர்கள் ஆய்ந்து அறிந்து கண்ட உண்மை. ஒரு பெரிய ஆலமரம் அதன் சிறிய வித்து ளடங்கியிருந்து வெளிப்படுமாறு போல * நினைக்கத்தக்க எல்லாப் பொருள்களும் இவ்வைந் தெழுத்துக்களி லடங்கி சிந்தை செல்லுமளவில் விரிந்து காட்டும்.

சி - சிவன் என்று இறைவனைக் குறிக்கும்;
வா - வாலை என்று அருளைக் குறிக்கும்;
ய – சப்த தாதுக்களால் கட்டப்பட்ட உடலையுடைய உயிர்களைக் குறிக்கும்;
ந - உயிர்களை மறைத்து வைக்கும் அறியாமையைக் குறிக்கும்;
ம : உயிர்களைப் பற்றிய ஆணவம், கன்மம், மாயையாகிய மலங்களைக் குறிக்கும்.

"சிவன், சத்தி, சீவன், செறுமல, மாயை
அவஞ் சேர்ந்த பாச மலமைந் தகலச்
சிவன் சத்தி தன்னுடன் சீவனர் சேர
அவஞ்சேர்ந்த பாச மணுகு கிலாவே" திருமூலர்.

இப்பாட்டின் முதலடி ஐந்தெழுத்துக்களையும் குறிக்கின்றன.

"ஆறுறகன்று நமவிட் டறிவாகி —.வேறான
தானே யகரமாய் மிக்கோங்கி
யீறுர் பரைவி னிருளற்ற தற்பரன் — பேறூர்
சிவாய வடங்கும் பின் முத்தியே" — திருமூலர்

* Evolution and Involution.

ஆறுவகைப்பட்ட உட், புற சமயங்களையும் விட்டு நீங்கி, நம என்ற மறைப்பு மலங்களையும் ஒழித்துவிட்டு ஞானமடைந்து இறைவனுடன் ஒன்றுதலை இது குறிக்கின்றது.

மருந்து என்பது திருநீறு. இது உயிரின் மலங்களை அகற்ற வேண்டுமென்பதைக் குறிப்பின் உணர்த்துவது. உயிர் பாச மலங்களைநோக்கி யிருக்கும்போது பசு என்று பெயர் பெறும். பசு தன் மலத்தை நீக்கவேண்டு மென்பதைக் குறிக்கவே பசுவின் மலத்தை நீறுக்கி யணிவது. மணி, மந்திர, மருந்தை ஆகமம் நன்கு விளக்கும். தென்னாட்டுக் கோயில்கள் ஆகம முறைப்படி அமைந்தன.

கோயில் * கட்டுவதில் உலகத்தில் தமிழர்களே சிறந்தவர்கள். கட்டட முறையில் உள்ள தனிச் சிறப்போடுங் கூட அக்கோயில் உட்கருத்திலும் உலகத்திலேயே பெருஞ் சிறப்பு வாய்ந்தவை என்பதில் சந்தேகமே இல்லை. இலிங்கம், சிவம் சத்தியையும், பலிபீடம் மலத்தையும், இடபம் பசுவையும் குறிக்கும். இவ்வைந்தெழுத்தைப் பொதுவாக யாரும் உரைத்துப் பலன் பெறலாம்.

யோகம்:— யோகம், ஓகம் என்று முணரப்படும். மனம், மொழி மெய் முதலில் ஒன்றி அதனால் மலத்தை நீக்க வலிமை பெற்று பதியை யுணர்ந்து எல்லாம் ஒன்றியிருக்கும் தன்மையை உணர்வதே யோகமாகும். இதற்கு ஐம்பொறி யடக்கல் (இயம, நியம) முதலிய வழிகள் உண்டு.

ஞானம்:— மேற்கூறிய எல்லாவற்றையும் முற்று முணர்ந்தவர்களே முழு ஞானம் பெற்றவராவர்.

ஆகவே சித்தர்களின் வலிமை வெறும் வைத்தியத்தில் மட்டுமின்றி மிக்க அவசியமான ஞானத் தெளிவிலும் இருப்பதை கண்கூடாகக் காணலாம். மருந்தை மாத்திரம் உணறுவதால் அது சிக்கிரம் வியாபாரப் பொருளாகி அழியுமென்பது திண்ணம் என்பதைப் பேரறிவால் உணர்ந்த சித்தர்கள் அதற்கு இன்றியமையாத யோக ஞான வலிமையையும் அமைத்தனர்.

"ஒன்று கண்டீ ருலகுக் கொரு தெய்வமு
மொன்று கண்டீ ருலகுக் குயிராவது
நன்று கண்டீ ரினி நமசிவாயப்பழந்
தின்று கண்டேற் கிது தித்தித்தவாறே"

* The Tamil races were perhaps the greatest temple builders in the world. Encyclo.Brit. 9th edition. P.396.

எனத் திருமூலர் அருளியபடி ஐந்து எழுத்து மூலமாக உலகம் யாவும் ஒன்றியிருக்கும் உண்மையைக் கண்ட சித்தர்களது வலிமை மருந்துக்கு இன்றியமையாததாகிறது.

## வைத்திய வலிமை

வைத்தியத்தின் வலிமை நோய்வராமல் தடுப்பதில்தான் இருக்கிறது.

"எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்" (திருக்குறள்)

என்ற உண்மைப்படி சித்தர்கள் நமது தினசரி வாழ்க்கையையும் பருவ வாழ்க்கைகளையும் நோய் அணுகாது காத்து இனிய வாழ்வைப் பெறும்படியாக அரிய திட்டங்களை வகுத்து வழக்கத்தில் அமைத்ததை இன்றுங்கூட நாம் தெளிந்து போற்றுகிறோம். நோய் வராது காக்க ஒவ்வொருவருடைய தனிப்பட்ட நடத்தையும் பொது மக்களிடத்தே யுள்ள கூட்டுறவான நடத்தையும் செப்பம் பெற்றிருத்தல் அவசியம். இவ்வித செப்பத்தை நம் நாட்டில் தவிர வேறு எங்கும் காணுதல் அரிது. நோய்வராது காக்க உணவும் நடத்தையுமே முக்கியமாகையால் அவற்றைப்பற்றி விரிவஞ்சி சில குறிப்புகளை மட்டும் ஈண்டு சுருக்கமாக விளக்குகிறேன்.

உணவு:— ஒரு ஆண்டில் மழை, பனி, வெயில் ஆகிய மூன்று காலங்களில், தோன்றுதல், நிலைத்தல், மாறுதல் ஆகிய மூன்று சக்தி, களையும் கண்கூடாகக் காணலாம். இதை யொட்டியே ஒரு நாளில் காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று நேரங்களில் தக்க உணவுகளை நாம் உண்ணுகிறோம். உணவில் ஊன் சத்துள்ளவை உடல் வளர்ச்சிக்கும்; கொழுப்பு, சர்க்கரை ஆகிய இரு சத்துள்ளவைகள் உடலுக்கு எரிபொருளாக உதவி, செய்யுந் தொழிலுக்குத் தக்க வலிமையைக் கொடுத்து, உடல் நிலைத்தற்குக் காரணமாகின்றன.

கோதுமை, உழுந்து, பருப்பு இவை ஊன்சத்து மிக்கவை. அவற்றைக் காலை உணவில் நாம் சேர்த்துக் கொள்ளுகிறோம். ஒரு அவுன்ஸ்' பருப்பில் ஒரு 'அவுன்ஸ்' ஊன் சத்துள்ளதென இப்போது ஆராய்ச்சியில் கண்டுள்ளதை, 'பிடிக்குப்பிடி சதையாம்பேசு' என்று சித்தர்கள் குறித்துள்ளார்கள்.

அரிசி, எண்ணெய், நெய் இவை சர்க்கரைச் சத்தும், கொழுப்புச் சத்துமாக இருந்து நிலைத்தல் சக்தியாக உதவுகின்றன; இது நண்பகல் உணவு.

இரவில் மாற்றங்களைத் தடுக்கக்கூடிய பாலை நாம் சேர்த்துக்கொகிறோம். இம்முறை நவீன சத்துணவு ஆராய்ச்சியாளர் ஆச்சரியப்படும்படி இருக்கின்றது.

நடத்தை:— ஒவ்வொரு பருவத்தும் நோயைத் தடுக்கக்கூடிய ஒற்றுமைகள் நம்மிடம் அழகாக அமைந்திருக்கின்றன. தைமாதத்தில் ஒரேசமயம் ஊரிலுள்ள அனைவரும் வீட்டுச்குப்பை முதலியனவற்றை அகற்றி, வெண்சுதை பூசுவதனால் நோய்க்கிருமிகள் ஒருமிக்க ஊரை விட்டு ஒழிகின்றன.

ஐப்பசி மாதம் சூரிய ஒளி சரியாக இல்லாததால் நோய்க்கிருமிகள் பலப்படுவதை, கந்தகம், வெடியுப்புப் புகைகள் கொண்டு ஒரேசமயத்தில் தடுக்கின்றோம்.

கார்த்திகை மாதம் விளக்கொளி கொண்டும் நெருப்பின் உதவி கொண்டும் நோய்க்கிருமிகளை ஊரைவிட்டு ஓட்டுகிறோம். எக்காரியத்தையும் ஒற்றுமையினால் எளிதில் செய்து பலன் பெறலாம் என்பதை அவகாசமான சித்திரை மாதத்தில் ஒன்று சேர்ந்து பெரிய தேர்களை இழுத்து ஒற்றுமையின் வலிமையையும் உணருகிறோம்.

கோயில்களை, அதன் கட்டடத்திறமை, அதிலுள்ள கருத்தின் வலிமை தவிர, உடல்வலிமை பெறுவதற்குத் தக்க இடமாகவும் சித்தர்கள் அமைத்திருப்பதை உணருகிறோம். கோயிலில் படைத்து நாம் உண்ணும் பழம், தேங்காய் முதலிய பொருள்கள் நம் உடலைக் காப்பதில் உயர்ந்த பொருள்கள் என்று நவீன ஆராய்ச்சியாளர்கள் கண்டிருக்கிறார்கள்.

பாலும், பாற்பொருட்களும், பழக்குழம்பு முதலியனவும் உயர்ந்த காப்புணவுகள். அவை எளியோர்க்கும் இலவசத்தில் கிடைக்கக்கூடிய இடம் கோயிலே. இப்போதைய சிசு சம்ரட்சணை சாலைகளைவிட எல்லாமக்களின் உடல் நலத்தினையும் காப்பாற்றுவதில் கோயிலைத்தவிர மேலான கழகங்கள் எதுவும் இருக்கமுடியாது.

## சித்த வைத்தியம்

சித்தர்களது வைத்தியமுறை சித்தவைத்தியம் எனப்படும். சித்தமும் அதனாலேயே இயக்கப்படு முடலும் நோய்ப்பட்ட காலத்து சித்தத்தைச் சிறப்பாகக் கொண்டு உடலை நன்கு ஆய்ந்து எல்லாக் கருவிகளும் இயற்கையில் இயங்குமாறு வைத்து அவசியமானால் மருந்தையும் உடலில் வைத்து இயக்குவதே சித்தவைத்தியம்.

இது, 4448 நோய்களை, நாடி முதலிய எண்வித சோதனைகளா லறிந்து இரசம் 5, உபரசம் 120, உப்பு 35, பாடாணம் 32, வைப்புப் பாடாணம் 32, ஆடுஞ்சரக்கு 64, பல ஆயுதங்கள், எண்ணிறந்த பச் சிலைகள் கொண்டும், மணி, மந்திர, மருந்து கொண்டும் நோய் நீக்குவது இம்மருந்து எளிதில் நோய் நீக்க வல்லது; சுவை முதலிய குண முடை யது; எளிதில் பெறப்படுவது; உடல் இயலுக்கு ஒத்தது ஆன உயர் குணங்களைப் பொருந்தியது.

## சித்த வைத்தியத்தின் வலிமை

இவ்விதம் சித்த வைத்தியத்தின் வலிமையை நான் ஒருவாறு உணர்ந்த சிறிதளவை என் ஆற்றலுக் கியல ஒரு சிறு சொற்பொழிவில் சொல்ல இயலாத எனது எளிமையை நன்கு உணர்ந்தும் 'அகஸ்தியன்' பத்திரிகாசிரியர் வேண்டுகோளை மறுப்பதற்கு அஞ்சி ஒரு சிறிது சொல்லியுள்ளேன்.

ஆங்கில வைத்தியம் (Evolution theory) பரிணும வாதம் என்பதைப் பொருள் விளக்கத்திற்குக் கூறும். சித்தவைத்தியம் வித் தில் மரம் அடங்குவதும், ஐந்து எழுத்தில் எல்லாம் அடங்குவதும் விரிவதும் (Evolution and involution) ஆகிய உண்மையின் இரு பக்கத்தையும் விளக்கும். இதையே 'மூடவிடவல்லதுமாய்' என்ருர் தேரையர்.

ஆங்கில பரிணுமவாதத்தில் பெரிய உயிர் சிற்றுயிரை உண்ணு வதும் இவ்விதம் ஒன்றைவிட ஒன்று மிக்கு உயர்வதை விளக்கும். இது ஒரு நிலையில் நின்றுவிடும். தமிழில் 'உள்ளது ஒன்று' அதுவே விரிகிறது; அதுவே ஒன்ருகச் சுருங்குகிறது என அழகாக விளக்கப் படுகிறது.

ஆங்கில வைத்தியம் உடலையும், உடலியக்கங்களையும் அடிப்படை யாகக் கொண்டு மருந்து வகுப்பது. நாம் சித்தத்தைத் தலைமையாகக் கொண்டு அதனுல் இயக்கப்படும் உடலில் முக்குற்றங்களை அறிந்து மருந்து கணிக்கின்ருேம். சித்தர்கள் இது கபத்தை நீக்குவது; இது குளிர்ச்சி செய்வது; இது பித்தத்தைத் தணிப்பது என பொருட் குணங்களை விளக்கியிருப்பதன் நன்மையைக் கண்கூடாகக் காண் கிருேம். மற்றவற்றை இவ்விதமே அவ்வப்போது ஆராய்ந்தறிந்து கொள்ளலாம்.

## வலிமை பெறும் வழி

வலிமை பெறும்வழி பல இருப்பதாலும் ஆராய்ச்சிச்சாலை, மருந்துச்சாலை, ஒற்றுமை ஆகிய மூன்றைப்பற்றி மாத்திரம் கூறுகிறேன்.

தமிழ் மருத்துவத்தைப்பற்றிய உண்மைகளின் சாயல்களை அவ்வக்காலத்து இயற்றப்பெற்ற இலக்கியங்களிலும் காணலாம்.

மீன் றேர் கொட்பிற் பனிக் கய மூழ்கிச்
சிரல் பெயர்ந் தன்ன நெடு வெள் ளூசி
நெடு வசி பரந்த வடு வாழ் மார்பின்". —(பதிற்றுப்பத்து 42)

மீனைத்தேடிச் சுழன்று குளிர்ந்த குளத்திலே மூழ்கி, மீன்கொத்திப் பறவை எழுகின்ற காலத்து அதன் வாயல கொக்கப் புண்களை இழை கொள்கின்ற காலத்து அப்புண்ணில் உதிரத்திலே மறைந்தெழுகின்ற ஊசியினுலேற்பட்ட ஊசித்தழும்பும் புண்ணின் வடுவும் பொருந்திய மார்பு என்பது பொருள்.

இச் சங்க நூலிலிருந்து 'நெட்டை' என்ற பெயரையுடைய புண்ணைத் தைக்கும் கருவியான நெடு வெள்ளூசியை அறிகிறோம்.

" குறைவறு தெண்ணீர் நதியணை காந்தபுரத் தொருநல்
விறைமகளார் மகவீனப் பொருதுட லேங்க வகிர்
துறைவழி யேற்று மகிழ்வூட்டு மங்கலை தோன்றிவளர்
மறைவழி தேர் நறையூர் நாடுசூழ் கொங்கு மண்டலமே"

என்ற கொங்குமண்டல சதகச் செய்யுளில், வயிற்றைக் கிழித்து குழந்தையை எடுத்து பின் வயிற்றைத் தைக்கும் முறையைப்பற்றி உணருகிறோம்.

---

இவ்விதம் பல நூல்களிலுள்ள மருந்தின் சாயல்களை வல்லார் வாய்க்கேட்டுச் சேர்த்து நவீன ஆராய்ச்சியாளரது போக்கிற்கு நம் முறை எவ்வளவு தூரம் விளக்கம் கொடுக்கிறது என்பதையும் தொகுத்து மேலும் ஆராய்ச்சி முறையால் புதிய உண்மைகளையும் நாம் எடுத்து இயம்பக்கூடும்.

"..........................
.....................மாலை வெயிற்
காய்ந்தார்க் குறுபிணிமுற் காறுமி லக்கணநூ
லாய்ந்தார்க் குறுவழுச்சொ லாம்", (தேரையர்)

மாலைக்கால வெய்யிலில் காய்ந்தவர்களுக்குப் பொருந்திய வியாதிகள், பழமையாகிய குற்றமற்ற இலக்கணநூல் ஆராய்ச்சி செய்துணர்ந்த வித்துவான்களுக்குக் காணப்படுகிற வழுவற்ற சொற்கள் நீங்கல்போல நீங்கிவிடும் என்று தேரர் கூறுவதின் இலக்கணத்தின் அவசியத்தை உணருகிறோம். மருத்துவர் இலக்கண உதவி கொண்டு மருந்து நூலில் உள்ள பிழைச்சொற்களை நீக்கிச் சுத்த பாடமாக்குவது மிகவும் அவசியம்.

ஆராய்ச்சிச் சாலையை ஒட்டி மருந்துச்சாலை ஒன்று அமைத்து நமது உயர்ந்த மருந்துகளின் நன்மைகளை உலகத்தின் பல பாகத்தாரும் அடையும்படி அவர்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

இவை அரசியலார் உதவியின்றி நடத்துவது இப்போது வெகு சிரமமே. ஆனால் ஒற்றுமையுடன் ஒத்துழைப்பதனால் கிடைக்காத பலன் ஒன்றுமில்லை. எல்லாப் பலன்களும் கிடைக்கும்.

ஒன்று சேர்ந்து வலியராகி, உரிமை பெற்று ஓங்குவோம்!
தொன்று தொட்ட துகள்தீர் சித்தர் தூமருந்து துளிர்க்கவே!!
மன்று சேர்ந்து மருந்தை மீட்டு, மண்ணுள்ளோர்கள் மயக்கற
இன்று தொட்டு எழுவோம் யாரும், நன்று நன்று என்னவே!!

முற்றியது

---

இந்திய மருத்துவப் பாடசாலை, 1942ம் வருஷம் மார்ச்சு மாதம் L. I. M. பரிக்ஷையில் தேறிய சித்தவகுப்பு மாணவர்களின் பெயர்கள்.

முதல் வருட வகுப்பு.

B. பாலசுப்பு
A. பாலசுப்பிரமணியம்
N. கோபாலன்
N. இராமனுதன்
ஸ்ரீமதி இராணி
T. குமாரசாமி
G. வெங்கடராஜுலு
T. N. வெங்கடரங்கம்
K. வெங்கடேச நாயுடு

இரண்டாம் வருட வகுப்பு.

M. சிதம்பரம்
T. கணேசன்
S. N. இலக்குமிநாராயணன்
V. T. இராஜேசுவரி
N. இராமசந்திரன்
K. C. சண்முகரத்தினம்
A. V. துளசிராமன்
M. வெங்கடரமணன்
S. வெங்கடராவ்

மூன்றாம் வருட வகுப்பு.

T. T. S. கிருஷ்ணன்
R. குஞ்சம்மாள்
C. B. மணவாளன்
K. இரங்கநாதன்
R. சகுந்தலாபாய்
S. சுப்பிரமணியன்
P. K. சுவர்ணம்பாள்

# கோமூத்திர சிலாசத்து

Dr. R. தியாகராஜன், L. I. M.

சிலாசத்து என்பது சிலை+சத்து எனப் பிரிந்து மலையினுடைய சத்தைக் குறிக்கும்.

"தியானித்த சிலாசத்திர ண்டதாகும்
செப்பவே கர்ப்பூர சிலாசத்தென்றும்
கியானித்த கோமூத்திர சிலாசத் தென்றும்
கெடியாக ரெண்டுவித பேதமாகும்".

என்ற வடிகளால் அதன் வகையும் பெயரு மறியலாம். சிலர் சிலாரசமும் சிலாசத்தும் ஒன்றென்று கூறுகின்றனர்.

"குங்கிலிய மகருவகி லீக முபயத்தாறு
குறும் பொறை யிரத மணப்பால்'

என்றவடி அட்டாங்கதூப பில்லையில் சேர்க்கப்படும் சரக்குகளைக் குறிக்கின்றது. அதில் குறும் பொறை யிரதம் சிலாரசத்தைக் குறிக்கின்றது. அது சிலாசத்தானல் தூபபில்லையில் அதைச் சேர்க்கின்ற பழக்கம் இல்லாமையினுல் இரண்டும் ஒன்று என்று கூறுவாரின் கூற்றில் ஆசங்கை ஏற்படுகின்றது.

கர்ப்பூர மணத்தையும் படிக ஒளியையும் பெற்றிருக்கும்சிலாசத்துக்குக் கர்ப்பூர சிலாசத்தென்றும், பசு மூத்திரத்தின் மணத்தையும் நிறத்தையும் பெற்றிருக்கும் சிலாசத்துக்குக் கோமூத்திர சிலாசத்தென்றும் பெயர் வந்தன. கோமூத்திர சிலசத்துக்கு உரைஞ்சியம் என்று ஒரு பெயருமுண்டு. இதனை யூனனி வைத்தியர்கள் மொம்மியாயி என்று கூறுகின்றனர். இப்பொருள் ஹரித்வாரம், சிம்லா, நேப்பாளம், ஹிரேனியா இஸ்தபான முதலிய இடங்களிலுள்ள மலைகளின் வெடிப்புகளில் கோடையில் வெளிப்பட்டுக் கோமூத்திர நிறத்துடனும் ஒளியுடனும் மெழுகைப்போல மிருதுவாகவும் உரைந்திருக்கும். தங்கம் உள்ள மலையில் பிறந்த சிலாசத்து கனக சிலாசத்தென்றும் வெள்ளியை உடைய மலையில் பிறந்தது வெள்ளி சிலாசத்தென்றும், செம்புள்ள மலையில் பிறந்தது தாம்பிர சிலாசத்தென்றும், அய மலையில் பிறந்தது அய சிலாசத்தென்றும் நால்வகைப்படும். மற்றும், தகரம், வங்கம் உள்ள மலைகளிலும் சிலாசத்து உற்பத்தியாகின்றது. ஏம சிலாசத்து சிவப்பு நிறமாயும், வெள்ளி சிலாசத்து வெண்மை

நிற மாயும், தாம்பிர சிலாசத்து நீல நிறமாயும், அய சிலாசத்து மங்கிய கறுப்பு நிறமாயு மிருக்கும். இவைகளில் ஏமசிலாசத்தும் தாம்பிர சிலாசத்தும் கிடைப்ப தரிது. ஏமசிலாசத்தை வாத பித்த நோய்களிலும், வெள்ளி சிலாசத்தைக் கபபித்த நோய்களிலும், தாம்பிர சிலாசத்தை கப நோய்களிலும், அய சிலாசத்தை முக்குற்றப் பிணிகளிலும் பிரயோகிக்கப் பலனுண்டாம். அய சிலாசத்து காயகல்ப சிகிச்சைக்கும் மூப்பை நீக்கவும் சிறப்பாக உபயோகப்படும்.

நிற்க, சூதத்தை மடிய வைப்பதும், காணியளவிட ஆட்டு மாமிசத்தைக் கரைக்கும் தன்மையையும் உடைய மாங்கிஷத்திராவி என்றும்; லோகத்தை நீற்றவும், எலும்பைக் கரையும்படிச் செய்யவும் வல்லமை யுடைய அஸ்திதிராவி யென்றும்; பாஷாணத்தை நீற்றவும் அன்னத்தைக் கரையும்படிச் செய்யும் வல்லமையையுமுடைய அன்னத்திராவி யென்றும்; நாகத்தை வேதைக்கு உபயோகமாம்படிகட்டும் தன்மையையும், சங்கைக் கரைக்கக் கூடிய தன்மையையும் உடைய சங்கத்திராவி என்றும் நால்வகைத் திராவியை கோமூத்திர சிலாசத்தின் கீழ் மதாந்தரமாகக் கூறப்பட்டுள்ளது.

கோமூத்திரசிலாசத்து நாற்பது வருடகாலம் கெடாமல் வன்மையுடன் இருப்பதன்றி அதனை அருந்தியவுடன் தேக முழுதும் பரவி அதன் பலத்தையும் குணத்தையும் உடனே காட்டும்.

'தீருமே கோமூத்திர சிலாசத்துத்தான்
செயமான வாதத்துக் குறுதியாகும்',

என்ற வடியால் இது வேதைக்குமாம் என்பது புலப்படுகின்றது.

சோதனை :— (1) அசல் கோமூத்திர சிலாசத்தாய் இருந்தால் கொஞ்சம் நீரிலிட சிவப்பு நிறக்கால் விட்டிறங்கும். (2) நெய்யைச் சூடுசெய்து அதில் கசகசா பிரமாணம் கோமூத்திரசிலாசத்தைக் கலந்து ஒரு கோழியின் காலை ஒடித்து அக்கோழிக்கு அந்நெய்யைக் கொடுத்து ஒடித்த இடத்திலும் பூசினால் உண்மைச் சரக்காயின் இரண்டு மணி நேரத்தில் கோழி நடக்கும். போலிச் சரக்காயின் மறுநாள் கோழி நடக்கும். (3) இதனை நெருப்பிலிட்டுக் கொளுத்தப் புகையாமல் எரியின் உண்மைச் சரக்காம். எரிந்த பிறகு அயச்செந்தூரம் போலிருக்க வேண்டும், உண்மைச் சரக்கு பெர்ஷியா தேசத் தரசனிடம் தவிர மற்றையோரிடம் கிடைக்காதென்றும் கூறுகின்றனர்.

இப்பொருளுக்குப் புளிப்புச்சுவையேனும் துவர்ப்புச் சுவையேனுமில்லை என்றும், சிறிது புளிப்புச்சுவை உண்டென்றும் கூறுவர்.

இது தேகத்தைச் சூடுசெய்து குளிர்ச்சியாக்குவதன்றி அதிகமாகவும் சூட்டை உண்டுபண்ணும். இது கார்ப்புப் பிரிவை படைகின்றது.

கோமூத்திரசிலாசத்தைச் சூட்டுடம்பினருக்கு கொடுத்தல் கூடாது. இதற்கு முரிவு சூடனையாவது தேனையாவது கொடுக்க வேண்டும். இதனை நெல் முதல் குன்றியளவுவரைக் கொடுக்கலாம்.

கோமூத்திரசிலாசத்துடன் எப்பொருளைச் சேர்த்துக் கொடுக்கின்றேமோ அப்பொருளின் வீரியத்தையும் குணத்தையும் அதிகப்படுத்தும் தன்மை இதற்கு உண்டு.

இதற்கு வெளிப் பிரயோகத்தினுல் அழுகலகற்றி, வேதனு சாந்தினி, வீக்கமகற்றி, புழுக்கொல்லிச் செய்கைகளும், உட்பிரயோகத்தினுல் வியாதாபேதகாரி, பலகாரி, மலமிளக்கி, பித்தகாரி, கோழையகற்றி, நாற்றமகற்றி, மூத்திர்விர்த்தினி, கற்கரைச்சிச் செய்கைகளும் உண்டாம். இதன் குணத்தைக் கீழ்க்காண்க.

"கோமூத்திர சிலாசத்தாற் குறுகிப்
போமூத்திர மெரிவுட்புண் மேகம்—நாமேவு
வெப்புதிர வெப்புமறும் வீழிமுனி விம்பந்
துப்புமஞ்சு மெல்லிதழாய் சொல்".

(போ—ள்) மூத்திரக்கிரிச்சரம், மூத்திரநாள எரிவு, மூத்திரநாளப்புண், பிரமேகம், நாக்கில் சூடு, இரத்தக் கொதிப்பு இவைகளைக் கோமூத்திரசிலாசத்து நீக்கும்.

குறுகிப்போம் மூத்திரம் என்பதற்கு அதிமூத்திரம் குறுகி தன்னிலையடையும் என்று பொருள்தோன்றும் நயம் காண்க.

அன்றியும், கோமூத்திரசிலாசத்து உயிருக்கும் இருதயத்திற்கும் பலத்தைக் கொடுத்து, நரம்புகளை வன்மைப்படுத்தி வீரிய விர்த்தியையும், ஆண்மைத்தன்மையையும் அதிகப்படுத்தும். காசம், சுவாசகாசம், க்ஷயம், குடலைப்பற்றிய பிணிகள், கர்ப்பாசயத்தைப் பற்றிய நோய்கள், மலடு, வாத நோய்கள், தாவர சங்கம விடங்கள், அடிபட்ட வீக்கம், அதனுல் ஏற்பட்ட விரணங்கள் தீரும். இது ஒடிந்த என்பைச் சேர்த்து வைக்கும். நீரைப்பற்றிய வியாதிகள், சூதகவலி, சிலைப்பற்றிய நோய்கள், பித்தப்பையிலும் வஸ்தியிலும் உண்டாம் கற்கள் இவற்றை நீக்கும் தன்மை கோமூத்திரசிலாசத்துக் குண்டு.

மற்றும், கோமூத்திரசிலாசத்தை சர்மரோகத்துக்கும் கொடுத்தல் உண்டு.

இதனை உபயோகிக்குமுன் சுத்தித்துக்கொள்ள வேண்டும். சில சுத்திமுறைகளைக் கீழ்க்கூறுவாம்.

(1) இதனை வெந்நீரில் கலந்து அழுத்தமான துணி அல்லது கம்பளியிலிட்டு வடிகட்டி வெய்யிலில் வைக்கவும். இதன்மேல் ஆடை கட்டும். இதனை வழித்து உலர்த்திக்கொள்ளவும். ஆடை கட்டாதிருக்கும்வரை செய்யவேண்டும்.

(2) முன்போலவே பசு மூத்திரத்தில் செய்ய சுத்தியாம்.

(3) பசுப்பால், திரிபலைக் குடிநீர், கரிசாலைச்சாறு இவைகளில் ஏதாவதொன்றை கோமூத்திரசிலாசத்துக்கு விட்டு ஒரு நாள் முழுதுமரைத்து உலர்த்தி எடுத்துக்கொள்ளச் சுத்தியாம்.

கோமூத்திரசிலாசத்திற்கு அனுபானமும் பிணிநீக்கமும்.

தவடை, நா இவ்விடங்களில் உண்டாம் பிணிகளுக்கு கோமூத்திரசிலாசத்தை நெல்லளவு வெந்நீரில் கலந்து மேற்படி இடங்களிலும் முகத்திலும் பூசக் குணமாகும்.

நாசிப்பிணிக்கும் காதுவலிக்கும் இதனை வெந்நீர் அல்லது பன்னீரில் கலந்து நாசியிலும் காதிலும் துளிக்கணக்கில் விடத் தீரும்.

நெடுநாட்பட்ட தலைவலிக்கு இதனுடன் கஸ்தூரி, பச்சைக் கர்ப்பூரம் சமவெடை கூட்டி வெற்றிலை இரசத்தில் கலந்துபூச த்தீரும்.

காதிரைச்சலுக்கும் காதுப்புண்ணுக்கும் இம்மருந்தைச் சிறு துணியில் முடிகட்டி காதிற்குள் வைக்க நீங்கும்.

நாக்குத்தெத்தல், நாக்குத்தடிப்பிற்கு தேனில் இதனைக் கலந்து நாக்கில் தேய்க்கக் குணமாம்.

கொஞ்சம் மருந்தைத் தாடையில் அடக்கிக்கொள்ள பேசும் பொழுது உண்டாம் பெருமூச்சு நிற்கும்.

நெல்லெடை மருந்தைக் கழுதைப்பாலில் கொடுத்துவர ஆரம்ப பைத்தியரோகமும் வாயினின்று வெளிப்படும் இரத்தமும் விலகும்.

பொடியிருமலுக்குக் காட்டிலந்தைப் பழரசத்திலாவது, தண்ணீர் தேன் கலப்பிலாவது, தேன் பால் கலப்பிலாவது கோமூத்திரசிலாசத்தை இரு நெல்லெடைவீதம் இருவேளை மூன்றுநாள் கொடுக்க நீங்கும்.

சீதளம், பித்தம், சுரங்களினால் வயிற்றில் உண்டாகும் கட்டிகளுக்குப் பருத்திவிதைக் குடிநீரிலாவது கொத்தமல்லிக் குடிநீரிலாவது இதனை அனுபானித்து நான்கு அல்லது ஐந்து நாள் கொடுக்க நீங்கும். பிலீக ஊதலுக்கும் இதனைக் கொடுக்கலாம்.

வாதசம்பந்தமான மூலவியாதிக்கு இதனைப் பசுநெய்யில் கலந்து கொடுக்கவும். ஆசனவழியாய் வருகின்ற சீதரத்தமும் நிற்கும்.

கர்ப்பப்பையில் வாயுவால் உண்டாகின்ற நோய்களுக்கும், ஸ்மரணை தப்பலுக்கும் மருந்தை வெற்றிலைக் குடிநீரில் அனுபானித்துக்கொடுக்கத் தீரும்.

எரிச்சலோடு கூடிய நீர்ச்சுருக்குக்கு நெல்லெடை மருந்தைக் கோதுமை மாவுடன் கலந்து வர்த்திசெய்து மூத்திரத் துவாரத்தில் சொருகக் குணமாம்.

குதம் வெளிப்பட்டால் இதனைத் தேங்காய் எண்ணெயில் கலந்து இரண்டு அல்லது மூன்றுநாள் தடவக் குணமாகும்.

நபுஞ்சத்வம்:— பாதி வெந்த கோழிமுட்டையிலுள்ள மஞ்சட்கருவில் குன்றியெடை மருந்தைக் கலந்து தினமொரு வேளை வீதம் மூன்று நாள் கறி, ரொட்டி பத்தியத்துடனருந்தினால் ஆண்தன்மை அதிசீக்கிரத்தில் பிறக்கும். தேங்காய் எண்ணெயில் இரண்டு குன்றியெடை மருந்தைக் கலந்து ஆண்குறியின்மீதும் விரையின்மீதும் பூசி கொஞ்சம் மர்த்தனம் செய்தால் ஆண்தன்மை விர்த்தியாகும். இரவில் முழுக்கடலையை ஊரவைத்து காலையில் நீரை வடிகட்டி அதிலாவது கொதிக்கிற நெய்யில் கோழிமுட்டை உடைத்துப்போட்டு மஞ்சட்கரு கெட்டியாகுமுன் எடுத்து அதிலாவது குன்றியெடை மருந்தைக்கலந்து சாப்பிட ஆண்தன்மை விர்த்தியாம். அதிகக்கலப்பினால் வீரியம் கெட்டவருக்கு இரு நெல்லெடை மருந்தை ஐந்து தம்படி எடை தேனில் கலந்து சாப்பிட சீக்கிரத்தில் வீரியம் உண்டாம். வீர்ய விர்த்திக்கும் போக இச்சைக்கும் வாத உடம்பினர் மருந்தை வெண்ணெய் அல்லது தேனிலும், சூட்டுடம்பினர் தித்திப்பு மாதளம்பழ பானகத்திலும் சாப்பிட வேண்டும்.

கீல்பிடிப்பு, முதுகெலும்பு, கைநோய்களுக்குக் கோழிமுட்டை மஞ்சட்கருவில் இதனைக் கலந்து பற்றுப்போட்டு, பன்னீரிலாவது, ஏலக்காய்க் குடிநீரிலாவது, நல்லெண்ணெயிலாவது உள்ளுக்குக் கொடுக்க நீங்கும்.

பேய்நாய்க் கடிக்கும் தேள்கடிக்கும் வேலம்பட்டை சாராயத்தில் இதனைக்கலந்து கடித்தவிடத்திலிட குணமாம்.

நீர்க்கோவை, தலைவலி, மயக்கம், மூர்ச்சை இவைகளுக்கு கோமூத்திரசிலாசத்தைத் தவன இலை ரசத்தில் கொடுக்கத் தீரும்'

என்பு முறிவுக்கு இதனைக் குன்றியளவு நெய்யிலிட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

நாட்பட்ட தலைநோய் நீங்கக் குன்றியளவு சிம்பால் குன்றி எடை கோமூத்திரசிலாசத்துச் சேர்த்து நசியமிட குணமாம்.

தலைபாரம், காதில் பிறக்கும் இரைச்சல் நீங்க மேற்படி நசிய மருந்துடன் தேனைக் கலந்து மூக்கிலும் காதிலும்விட குணமாம்.

வயிற்றைப்பற்றிய பிணிகளுக்கு சீரகம், சோம்பு சேர்த்து குடிநீரிட்டு அதில் குன்றியளவு மருந்திட்டுக் கொடுக்க நீங்கும்.

சுகசன்னி மூத்திரநாளப் புண்களுக்கு பசுவின் காய்ச்சாத பாலில் நெல்லெடை மருந்தை அனுபானித்துக் கொடுக்கத் தீரும்.

பாளக்காயங்களுக்கு ஒரு நெல்லெடை மருந்தை நெய்யிலிட்டுக் காய்ச்சி உள்ளுக்கும் கொடுத்து மேலுக்கும்பூச குணமாம்.

கோமூத்திரசிலாசத்துடன் அப்பிரகபற்பம் சேர்த்து மதுமேகத்திற்குக் கொடுக்கலாம். மதுமேக நோயில் காணும் அதிமூத்திரம், தாகம், கரபாதசன்னி நீங்கும்.

நிற்க, கோமூத்திரசிலாசத்தைச் சுண்ணமாக்க வெடியுப்பு நீர் விட்டரைத்து வில்லைசெய்து உலர்த்தி சில்லிட்டு சீலைசெய்து புடமிட்டு எடுக்கவும்.

---

# எல். ஐ. எம். தாதுகோஷ்டி.

சென்ற டிசம்பர் மாதம் நடந்த 11 வது L. I. M. மகாநாட்டில் நிறைவேறின தீர்மானத்தின்படி டாக்டர்கள் C. துவரகனுதன், V. நாராயணசாமி, H. M. A. சக்கூர், மிஸ் இலட்சிமிபாய் ஆகியவர்கள் ஜனுப் பஷீர் ஹாமத் சையீத் அவர்களைத் தலைமையாகக் கொண்டு சென்னை கவர்னர் துரையவர்களின் அட்வைசரான ஆஸ்டின் துரையவர்களை இம்மாதம் 3 ம் தேதி பேட்டிகண்டு கீழ்க் காணும் விஷயங்களைச் சமர்ப்பித்து விண்ணப்பம் செய்துகொண்டனர்.

1. சென்னை இந்திய மருத்துவக் கலாசாலையில் தனி இந்திய மருத்துவமேயன்றி ஆங்கில முறையும் போதிக்கப்படுவதால் அரசாங்கத்தார் அதன் பெயரை "Indian Medicl School" என்றதிலிருந்து "School of Indian Medicine" என்று மாற்றி அமைத்தது பொருந்தாது.

2. இதுகாறும் தாய்குழந்தை சம்ரட்சணை (Maternity & Child Welfare) சாலைகளில் L. I. M. களை அமைத்துவந்து இப்பொழுது ஒருவித காரணமுமின்றி இனிமேல் அவர்கள் அவ்விதம் அமைக்கப்படமாட்டார்கள் என்று மாற்றினதானது 1941 ம் வருஷம் டிசம்பர் 10 ம் தேதி அர்சாங்கத்தார் தாங்கள் இந்தியமருத்துவக் கலாசாலை சம்பந்தமாக முந்திய ஜனநாயக மந்திரிகள் செய்த கொள்கைகளையும், ஏற்பாடுகளையும் மாற்றப்போவதில்லை என்பதாக விடுத்த அறிக்கைக்கு முரணாகக் காணப்படுகிறது.

3. சர்க்கார் உத்தியோகத்திலுள்ள L. I, M.தான் Medical Certificate கொடுக்கலாமென்றும் மற்றவர்கள் கொடுக்கக்கூடாதென்றும் ஏற்படுத்தினது L. I. M. களின் மதிப்பைக் குறைப்பதுடன் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அவர்களிடம் மருந்து எடுத்துக் கொள்வதை மறைமுகமாகத் தடுப்பதாகும்.

4. L. 1. M. களையும் யுத்தத்திற்கு I. M. D. சர்விஸில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

5. அரசாங்கக் கண்வைத்திய ஆஸ்பத்திரி, பிள்ளைப்பேறு (Materniry) ஆஸ்பத்திரி இவைகளில் L. I. M. களுக்குப் பயிற்சியளிக்க வசதி செய்யவேண்டும்.

6. இரண்டாவது உசுமான் கமிட்டியின் ரிபோர்ட்டைப்பற்றி இந்திய மருத்துவக் கலாசாலைத் தலைவர் அவர்கள் எழுதிய விஷயங்களை அரசாங்கத்தார் வெளிப்படுத்த வேண்டும்.

7. அரசாங்கத்தாரின் இவ்வருஷத்திய வரவு செலவு திட்டத்தில் (Budget) இந்திய கிராமாந்திர வைத்தியசாலைகளுக்குப் பணம் ஒதுக்கப்படாதது விசனிக்கத்தக்கது.